

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.5.2025) திருச்சிராப்பள்ளி மாநகர், பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், 236 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடிக்கு அடிக்கல் நாட்டி, அங்கு அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ். சிவராசு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.5.2025) திருச்சிராப்பள்ளி மாநகர், பஞ்சப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், பேரறிஞர் அண்ணா கனரக சரக்கு வாகன முனையத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், நகராட்சி நிருவாக இயக்குநர் எஸ். சிவராசு, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

சொன்னார். நேற்று ப்ளஸ்-2 முடிவுகள் வந்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அதிக விழுக்காடு மாணவர்கள் தேர்வு பெற்று வருகிறார்கள். இந்த ஆண்டும் அப்படித்தான். கல்வித்தரமும் பெருமளவு உயர்ந்திருக்கிறது. இடைநிற்றலே இருக்க கூடாது என்று பள்ளிக்கூடம் போகாமல் இருக்கின்ற மாணவர்களையும் வீடு வீடாக தேடிச் சென்று, அறிவுரை சொல்லி, வேண்டிய உதவிகள் செய்து, அவர்களை மீண்டும் பள்ளிக்கு அனுப்புகிறோம்.

அதேபோல், கடந்த 2022-ஆம் ஆண்டு நான் டெல்லி சென்றபோது, அங்கிருந்த மாதிரி பள்ளிக்கூடத்திற்கு கெஜ்ரிவால் முதலமைச்சராக இருந்தபோது சென்றேன். அப்போது அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்க்கின்ற போது எனக்கு என்ன தோன்றியது என்றால், "இது போல், இதைவிடச் சிறப்பாக தமிழ்நாடு முழுவதும் மாதிரிப் பள்ளிகள் உருவாக்க வேண்டும்" என்று அப்போதே நான் முடிவு செய்தேன். என்னுடைய அந்தக் கனவை மிகவும் சிறப்பாக நம்முடைய அன்பில் மகேஸ் அனைத்து மாவட்டத்திலும் செயல்படுத்திக் காட்டியிருக்கிறார்.

குறுகிய காலத்திலேயே அங்கே படித்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் இந்தியாவின் மிகச் சிறந்த உயர்கல்வி நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களுக்கும் படிக்கச் சென்றிருக்கிறார்கள். அப்படிச் செல்கின்ற மாணவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தி, நாம் எல்லாவிதமான ஆதரவும் செய்கிறோம்.

நேற்று துவாக்குடியில் திறந்து வைத்தது போல் நிரந்தரக் கட்டடங்களையும் உருவாக்கிக் கொண்டு வருகிறோம்.

அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், முதல் கட்டடத்தை அவருடைய மாவட்டத்தில் கட்டி முடித்துவிட்டார்.

**திருச்சிக்கும் ஓர் அறிவுச் சுரங்கம்! காமராசர் பெயரில் பிரமாண்ட நூலகம்!**

அதுமட்டுமல்ல, மதுரையில், கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தது போல், "என்னுடைய திருச்சிக்கும் ஒரு அறிவுச் சுரங்கம் வேண்டும்" என்று கோரிக்கை வைத்து, தற்போது பெருந்தலைவர் காமராசர் பெயர் சூட்டப்பட்டு, மிகப் பிரம்மாண்டமாக அந்த நூலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

நேரு அவர்களும், அன்பில் மகேஸ் அவர்களும், இப்படி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளில் நன்றாக ஸ்கோர் செய்து, எனக்கும் நல்ல பெயரை வாங்கித் தருகிறார்கள். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருக்கிறது.

**நான் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் கூட சொன்னேன். "இந்த அரசின் வெற்றி என்பது தனிப்பட்ட ஸ்டாலினின் வெற்றி இல்லை. அமைச்சர்கள், அதிகாரிகளின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றி" என்று சொன்னேன். அந்த வகையில், இந்த 2 அமைச்சர்களுக்கும் துணையாக இருக்கக் கூடிய துறைச் செயலாளர்கள், உயர் அதிகாரிகள், அத்தனை பேரையும் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். அவர்களுக்கு உங்கள் சார்பில், என்னுடைய வணக்கத்தையும் செலுத்த விரும்புகிறேன்.**

அடுத்து, இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கின்ற அரசு முதன்மைச் செயலாளர் கார்த்திகேயன் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர்

பிரதீப் குமார் திருச்சி மாநகராட்சி ஆணையர் சரவணன் ஆகியோருக்கும் - திருச்சி மாவட்டத்தின் அலுவலர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த பாராட்டுகள்! வாழ்த்துகள்!

**திருச்சிக்கும் - திராவிடத் தலைமகன்களுக்கும் உள்ள தொடர்பு!**

இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னால், நம்மை எல்லாம் ஆளாக்கிய, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - தலைவர் கலைஞர் ஆகியோருடைய சிலைகளைத் திறந்து வைத்துவிட்டுதான் இந்த மேடைக்கு வந்திருக்கிறோம்.

இந்தத் திருச்சிக்கும், இந்த திராவிட தலைமகன்களுக்கும் நிறையத் தொடர்பு இருக்கிறது. கடந்த நூறு ஆண்டுகளில், தமிழ்நாட்டின் வளத்திற்கும் - நலத்திற்கும் - நன்மைக்கும் - உயர்வுக்கும் - அவர்கள்தான் அடித்தளம்!

தந்தை பெரியார் பிறந்தது, ஈரோடு என்றாலும், அவர் மாளிகை கட்டி வாழ்ந்தது இந்தத் திருச்சி! பெரியாரும், அண்ணாவும் வெவ்வேறு வழக்குகளில் ஒரே சிறையில் இருந்ததும் இந்தத் திருச்சியில்தான்! இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தை, பெரியாரும், கலைஞரும் நடத்தியது இதே திருச்சியில்தான்!

கல்லக்குடி போராட்டத்தில் கைதான தலைவர் கலைஞர் அவர்கள், திருச்சி சிறையில்தான் அடைக்கப்பட்டார்! திராவிட இயக்கத்தின் போர்ப்பரணி பாடிய பல்வேறு புத்தகங்கள், இந்த திருச்சி மண்ணில் இருந்துதான் வெளியானது!

இது எல்லாவற்றின் அடையாளமாகத்தான் இந்த பெரியார் சிலையும் - அண்ணா சிலையும் - கலைஞர் சிலையும் - திருச்சியில் கம்பீரமாக அமைக்கப்பட்டிருக்கிறது! இதையெல்லாம் திறந்து வைக்கின்ற பெருமை எனக்குக் கிடைத்திருக்கிறது!

இப்படி அந்தத் தலைவர்களுக்கு சிலை அமைப்பது நம்முடைய கடமை மட்டுமல்ல; நாம் காட்டுகின்ற சிறு நன்றிக்கடன்!

**கழக அரசின் முத்திரைத் திட்டங்கள் - பட்டியல் இதோ!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, ஏராளமான முத்திரைத் திட்டங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அனைத்தையும் பட்டியலிட்டுச் சொல்லவேண்டும் என்றால் நேரம் போதாது. காலம் கடந்துவிடும். அது சாதனை விளக்கப் பொதுக்கூட்டமாக மாறிவிடும்!

எனவே சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்தியாக நான் சொல்ல விரும்புகிறேன்.

- இன்று திறக்கப்பட்ட 408 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 'முத்தமிழறிஞர் கலைஞர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்!'
- 128 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 ஏக்கர் பரப்பளவில் 'அண்ணா கனரக வாகனச் சரக்கு முனையம்!'
- இன்று 236 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 22 ஏக்கர் பரப்பளவில் 'பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடி' அமைக்கப்பட அடிக்கல் நாட்டப்பட்டு இருக்கிறது!'
- 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பெருந்தலைவர் காமராசர் பெயரில் மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம்!
- 18 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 'பறவைகள் பூங்கா!'
- 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'சர்வதேச ஒலிம்பிக் அகாடமி!'
- 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜல்லிக்கட்டு அரங்கம்!
- 4 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பச்சமலை சுற்றுலாத் திட்டம்!

**மிகவும் முக்கியமான திட்டம்; இந்த திருச்சி மாவட்டத்தில், தொழில் புரட்சி ஏற்படுத்திட மணப்பாறையில், 1100 ஏக்கர் பரப்பளவில் 'சிப்காட்' என்னால் தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தத்**

**தொழிற் பூங்காவில் உலகின் முன்னணி நிறுவனங்களான ஜபில், பெப்சிகோ தொழில் துவங்க உள்ளார்கள். இதன் மூலம் மட்டும் 10,000-க்கும் அதிகமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உள்ளது.**

அதுமட்டுமல்ல, இந்த நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அருகாமையில் தான் 400 கோடி ரூபாய் மதிப்பிலான 'டைடல்' பூங்கா என்னால் அடிக்கல் நாட்டப்பட்டு அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இப்படி, கடந்த நான்கு ஆண்டுகளில், 26 ஆயிரத்து 66 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 'மெகா' திட்டங்கள் திருச்சிக்காக மட்டுமே தரப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று திருச்சி வந்ததும், நம்முடைய திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்களில், திருச்சி மாவட்டத்தில் எத்தனை பேர் பயனடைகிறார்கள் என்கின்ற பட்டியலை வாங்கிப் பார்த்தேன். எனக்கே வியப்பாக இருந்தது.

- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையாக வாங்குகின்ற சகோதரிகள் எத்தனை பேர் தெரியுமா? 4 இலட்சத்து 42 ஆயிரத்து 124 பேர்.
- மாதம் ஆயிரம் ரூபாய் பெற்று, உயர்கல்வி உறுதிசெய்யப்பட்ட 'புதுமைப்பெண்' மாணவிகள் 34 ஆயிரத்து 784 பேர்.
- இதேபோல், 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்தில் 16 ஆயிரத்து 955 பேர் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.
- 'காலை உணவுத் திட்டத்தில்' எத்தனை பேர் பயன் பெறுகிறார்கள்? 86 ஆயிரம் பிள்ளைகள் சூடான - சுவையான - சத்தான உணவைச் சாப்பிடுகிறார்கள்.
- 'முதல்வரின் முகவரி' திட்டத்தில், தீர்வு காணப்பட்டது 3 இலட்சம் மனுக்கள். அதாவது 3 இலட்சம் குடும்பங்கள்.
- 'நான் முதல்வன்' திட்டத்தில், 68 ஆயிரம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி!
- இதுமட்டுமல்ல, 72 ஆயிரத்து 767 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வாழ்நாள் ஏக்கம் தீர்ந்திருக்கிறது.
- 5 ஆயிரத்து 843 விவசாயிகளுக்கு புதிய இலவச மின் இணைப்புகள்!
- 70 ஆயிரத்து 360 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 4 ஆயிரத்து 160 கோடி ரூபாய் கடனுதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது!
- 99 ஆயிரத்து 181 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவியை வழங்கியிருக்கிறோம்!
- 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தில், 4000 வீடுகள் கட்டித் தந்திருக்கிறோம்!
- 54 ஆயிரத்து 428 மாற்றுத்திறனாளிப் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நலத்திட்டங்களை எல்லாம் செய்த தெம்போடுதான், இன்றைக்கு இந்த மாபெரும் விழாவில்

- 527 கோடி ரூபாய் மதிப்பிலான, 3 ஆயிரத்து 597 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன்!
- 1,032 கோடி ரூபாய் மதிப்பிலான 7 ஆயிரத்து 122 முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்திருக்கிறேன்!
- அது மட்டுமல்ல, இதுவரைக்கும் நான் கலந்து கொண்ட விழாக்களில் அதிகமான பயனாளிகள் ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 132 பயனாளிகளுக்கு 856 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கியிருக்கிறேன். இந்த நிகழ்ச்சியில்தான் அதிகமான நிதியை வழங்கியிருக்கிறேன்.

**நமது அரசின் திட்டங்கள் கண்டு மலைத்த ஊடகத் துறையினர்!**

இந்த ஆட்சி வந்து 4 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கிறது. 5-ஆம் ஆண்டின் தொடக்கத்திற்கு வந்திருக்கிறோம். 5-ஆம் ஆண்டு துவங்கி திருச்சி மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு, பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களை சந்தித்துப் பேசினேன். இந்த 4 ஆண்டுகளில் நாம் செய்திருக்கின்ற முக்கியமான சாதனைகளை, அதனால் தமிழ்நாடு அடைந்திருக்கக்கூடிய வளர்ச்சியை அவர்களிடம் பகிர்ந்து கொண்டேன். அப்படிச், சொல்லும்போது எனக்கே ஒரு நொடி வியப்பாக இருந்தது. "அடேயப்பா! இவ்வளவு திட்டங்களை தொடங்கியிருக்கின்றோமே!" என்று எனக்கே மலைப்பாகத் தான் இருந்தது. ஊடக நண்பர்கள், "இத்தனை துறைகளில் இவ்வளவு சாதனைகள் நடந்திருக்கிறதா!" என்று அவர்களே ஆச்சரியப்பட்டார்கள்.

**அடுத்த இலக்கை அமைத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்கிறோம்!**

ஒன்று, இரண்டு என்றால் சொல்லலாம். ஒவ்வொரு நாளும் நாம் அவ்வளவு திட்டங்களைச் செயல்படுத்துகிறோம். சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். எல்லாவற்றிக்கும் முக்கியத்துவம் கொடுத்துச் சொல்ல முடியவில்லை. அடுத்த இலக்கை அமைத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்வதால், எல்லாவற்றையும் ஞாபகப்படுத்திக் கொள்ள முடிவதில்லை.

ஒரு உதாரணத்திற்கு பெரிய நகரங்களில் செய்திருக்கின்ற முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்களை மட்டும் சொல்கிறேன்.

**ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பெருமித அடையாளங்கள்தான் எத்தனை! எத்தனை!**

- மதுரையில், ஒற்றைச் செங்கலுடன் நிற்கின்ற 'எய்ம்ஸ்' போல் இல்லாமல், சொன்ன தேதிக்கு முன்பே சென்னையில் கட்டி முடித்து, 6 இலட்சம் மக்களுக்கு மேல் பயனடைந்து வருகின்ற, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை!
- கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா!
- கோவைக்கு செம்மொழிப்பூங்கா!
- மதுரைக்கு கலைஞர் நூலகம்! ஜல்லிக்கட்டு அரங்கம்!
- சிவகங்கை மாவட்டத்தில் கீழடி அருங்காட்சியகம்!
- குமரி முனையில் - வள்ளுவர் சிலைக்கு கண்ணாடி இழைப்பாலம்!
- அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்பூங்காக்கள்!
- டைடல் பார்க்குகள்!
- பணிபுரியும் பெண்களுக்கான 'தோழி' விடுதிகள்! என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பெருமித அடையாளங்களை உருவாக்கிக் கொண்டு வருகிறோம்.

நம்முடைய திராவிட மாடல் அரசு அமைவதற்கான வெற்றிப் பயணத்தைத் தொடங்கியதே இந்தத் திருச்சியில் இருந்துதான்! மறந்திருக்க மாட்டீர்கள்.

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னால், திருச்சியில் நடந்த 'விடியலுக்கான முழக்கம்' மாநாட்டில், அடுத்த 10 ஆண்டுகளுக்கான என்னுடைய கொள்கையை அறிவித்தேன். என்னவென்றால், "தமிழ்நாட்டைத் துறைவாரியாக எப்படி உயர்த்துவோம்" என்று சொல்லி, ஏழு வாக்குறுதிகளை அப்பொழுது நான் சொன்னேன்.

**முதல் வாக்குறுதி** - வளரும் வாய்ப்புகள், வளமான தமிழ்நாடு!

**இரண்டாவது வாக்குறுதி** - மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி!

**மூன்றாவது வாக்குறுதி** - குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்!

**நான்காவது வாக்குறுதி** - அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும் உயர்ந்த மருத்துவம்!

**ஐந்தாவது வாக்குறுதி** - எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்!

**ஆறாவது வாக்குறுதி** - உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த வாழ்க்கைத் தரம்!

**ஏழாவது வாக்குறுதி** - அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்!

இந்த ஏழு வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை இந்த 4 ஆண்டுகளிலேயே நாம் எட்டியிருக்கிறோம்!

பொருளாதாரத்தைப் பொறுத்தவரைக்கும், 9.69 விழுக்காடு என்பது இதுவரை தமிழ்நாடு பார்க்காத வளர்ச்சி!

இந்தியாவிலேயே நாம்தான் நம்பர் ஒன்! வேளாண்மையைப் பொறுத்தவரைக்கும், ஒவ்வொரு ஆண்டும் பாசனப் பரப்பும் - விளைச்சலும் அதிகமாகி சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக்கிறோம்! சட்டமன்றத்தில், தனி பட்ஜெட்டும் தாக்கல் செய்தோம்.

**புரட்சிகரத் திட்டங்களால் உயர்கல்வியில் பெரும் வளர்ச்சி!**

அதேபோல், கல்வியை எடுத்துக் கொண்டால், 'புதுமைப்பெண்', 'தமிழ்ப்புதல்வன்', 'நான் முதல்வன்' போன்ற நம்முடைய புரட்சித் திட்டங்கள் காரணமாக, உயர்கல்வியில் சேருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதுவும், இந்தியாவின் சராசரியை விட இரண்டு மடங்கு அதிகம்.

தலைசிறந்த கல்வி நிறுவனங்களில், ஐந்தில் ஒரு பங்கு தமிழ்நாட்டில்தான் இருக்கிறது என்று ஒன்றிய அரசே 'ரிப்போர்ட்' தருகிறார்கள்.

**நமது மருத்துவத் திட்டத்திற்கு ஐ.நா.விருது!**

காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும் போன்ற திட்டங்களால், பள்ளிக் கல்வியில், பெரும் வளர்ச்சியைப் பார்க்கிறோம். மாணவர்கள் இடைநிற்றல் குறைந்திருக்கிறது. சத்துக்குறைபாடு குறைந்திருக்கிறது. அட்டெண்டன்ஸ் கூடியிருக்கிறது.

- மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால், நம்முடைய தொலைநோக்குத் திட்டமான, 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தி, ஐ.நா. விருதையும் பெற்றிருக்கிறோம்.
- நகரங்களை மட்டுமல்ல, கிராமங்களை யும் வளர்த்திருக்கிறோம்.
- இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சமூகநீதி அரசை உருவாக்கி இருக்கிறோம்!

**நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் இது பல்லாண்டு!**

எந்தப் பிரிவினரும் விட்டுப்போகக் கூடாது என்று கவனமாகச் செயல்பட்டு - பிற்படுத்த ப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின பழங்குடியினர், சிறுபான்மையினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கையர், விளிம்பு நிலை மக்கள் என்று எல்லாருக்குமான ஆட்சியாக, நம்முடைய திராவிட மாடல் ஆட்சி, நாட்டுக்கே எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது! "நாடு போற்றும் நான்காண்டு; தொடரட்டும் இது பல்லாண்டு" என்று சொன்னோம்.

**இன்னும் பெரிய சாதனைகள் படைப்போம்!**

அடுத்து வருகின்ற ஆண்டுகளில், இப்போது நான் சொன்ன சாதனைகளை எல்லாம், நாமே வென்றுவிடுவது போல் இதைவிட பெரிய சாதனைகளைப் படைப்போம் என்று உறுதியாகச் சொல்கிறேன்! இதைத்தான் நம்முடைய அரசியல் எதிரிகளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை! அவர்களுடைய கடந்த ஆட்சியில் என்னவெல்லாம் நடந்தது என்று சிறியதாக 'ரீவைண்ட்' செய்து பார்க்கலாமா?

- 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக - நாடு முழுவதும் உழவர்கள் போராட்டம் நடத்திய போது, அவர்கள் அந்தப் போராட்டத்தை இழிவுபடுத்திப் பேசினார்கள். இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமி பேசினார்.
- காவிரி நீர் உரிமையைப் பெறவும் உச்சநீதி மன்றத்தில் உறுதியான வாதங்களை எடுத்து வைக்கவில்லை. அதனால், உழவர்கள் தற்கொலை செய்து கொண்டு அந்தத் துயரங்கள் எல்லாம் நடந்தது.
- இலங்கைத் தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் எதிரான குடியுரிமைத் திருத்தச் சட்டம், அ.தி.மு.க ஆதரித்து வாக்களித்த ஒரே காரணத்தால்தான் அது நிறைவேறியது. நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் பற்றி எரிந்தது.
- ஏன், ஜி.எஸ்.டி-க்கு தலையாட்டி, நம்முடைய அரசுகளின் உயிர் மூச்சான வரிவிதிப்பு உரிமையும் போனது.
- தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு
- சாத்தான்குளம் என்று பொது மக்களையே கொன்று குவித்தார்கள்.

ஏன் இதையெல்லாம் இப்போது நினைவுபடுத்துகின்றேன் என்றால், அப்படிப்பட்ட இருண்ட ஆட்சியிலிருந்து, நான்கே ஆண்டுகளில், நம்முடைய விடியல் ஆட்சி எப்படிப்பட்ட மாற்றத்தை நிகழ்த்திக் காட்டி இருக்கிறோம் என்று நீங்கள் ஒப்பீடு செய்து பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் சொன்னேன்.

இது வெறும் தொடக்கம்தான்! நான் சட்டமன்றத்திலேயே சொன்னேன். திராவிட மாடலின் வெர்சன் 2.0 இனிதான் லோடிங்!

**அடுத்துவரும் ஆண்டுகளில், ராக்கெட் வேக வளர்ச்சி பார்ப்பீர்கள்!**

4 ஆண்டுகளில், சரிவில் இருந்து நம்பர்-1 மாநிலமாகி, சாதனை படைத்தோம்! இனி நாம் போகின்ற பாதை சிங்கப் பாதையாக இருக்கும்! ராக்கெட் வேக வளர்ச்சி என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதை அடுத்து வரும் ஆண்டுகளில் பார்ப்பீர்கள்.

அது நடந்தேற, தொடரட்டும் நமது திராவிட மாடல் ஆட்சி பல்லாண்டு! என்றும் நாங்கள் உங்களோடு! என்றைக்கும் உங்களோடு இருப்போம்! என்றும் நீங்கள் எங்களோடு இருக்கவேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## பெருமையின் அடையாளமாக அரசுப் பள்ளிகளை உருவாக்கி வரும் அன்பில் மகேஸ் பொய்யாமொழி



அடுத்து, திருச்சியில் இருந்து மற்றொரு அமைச்சரும் இருக்கிறார். நம்முடைய தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி. அவர் மட்டும் சாதாரணமானவரா என்ன? பள்ளிக் கல்வித்துறை அமைச்சரானவுடன், "அரசுப் பள்ளிகள் வறுமையின் அடையாளமல்ல, பெருமையின் அடையாளம்" என்று சொன்னார். நேற்று ப்ளஸ்-2 முடிவுகள் வந்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அதிக விழுக்காடு மாணவர்கள் தேர்வு பெற்று வருகிறார்கள். இந்த ஆண்டும் அப்படித்தான். கல்வித் தரமும் பெருமளவு உயர்ந்திருக்கிறது. இடைநிற்றலே இருக்கக் கூடாது என்று பள்ளிக்கூடம் போகாமல் இருக்கின்ற மாணவர்களையும் வீடு வீடாக தேடிச் சென்று, அறிவுரை சொல்லி, வேண்டிய உதவிகள் செய்து, அவர்களை மீண்டும் பள்ளிக்கு அனுப்புகிறோம்.

அதேபோல், கடந்த 2022-ஆம் ஆண்டு நான் டெல்லி சென்றபோது, அங்கிருந்த மாதிரி பள்ளிக்கூடத்திற்கு கெஜ்ரிவால் முதலமைச்சராக இருந்தபோது சென்றேன். அப்போது அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்க்கின்ற போது எனக்கு என்ன தோன்றியது என்றால், "இதுபோல், இதைவிடச் சிறப்பாக தமிழ்நாடு முழுவதும் மாதிரிப் பள்ளிகள் உருவாக்க வேண்டும்" என்று அப்போதே நான் முடிவு செய்தேன். என்னுடைய அந்தக் கனவை மிகவும் சிறப்பாக நம்முடைய அன்பில் மகேஸ் அனைத்து மாவட்டத்திலும் செயல்படுத்திக் காட்டியிருக்கிறார்.

## எதிர்பார்த்ததைவிட மிகச்சிறப்பான முறையில் ஆட்சி நடத்துகிறார்!

# இந்தியாவில் மிக முக்கியமான தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்!

## ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சியின் ‘கேள்விக்களம்’ பகுதியில் – டெல்லி அம்பேத்கர் பல்கலைக்கழகப் பேராசிரியர் ராஜன்குறை கிருஷ்ணன் ஆணித்தரமான பதில்!

**சென்னை, மே. 10–**

**“எதிர்பார்த்ததை விட மிகச்சிறப்பான முறையில் ஆட்சியை நடத்தி இந்தியாவில் மிக முக்கியமான தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார்” என்று டெல்லி அம்பேத்கர் பல்கலைக்கழகப் பேராசிரியர் ராஜன்குறை கிருஷ்ணன் ‘சன் நியூஸ்’ தொலைக்காட்சி கேள்விக் களம் பகுதியில் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.**

“சன் நியூஸ்” தொலைக்காட்சியின் கேள்விக் களம் பகுதியில் புதுடெல்லியிலுள்ள அம்பேத்கர் பல்கலைக்கழக பேராசிரியர் ராஜன்குறை கிருஷ்ணன் அவர்கள் பங்கேற்று பேசியதாவது:-

**கேள்வி:** நான்காண்டு காலத்திற்கு முன்னால், ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்கின்ற நேரத்தில், இதையெல்லாம் செய்வார் என்றும், இந்த அளவிற்குப் போராடுவார் என்று எதிர்பார்த்தீர்களா? அல்லது நிர்வாகத்தில், மற்றவற்றில் இதைவிட அவர் இன்னும் சிறப்பாக செய்திருக்க முடியும்? நான் எதிர்பார்த்த அளவிற்கு செய்யவில்லை என்று நினைக்கிறீர்களா?

**ராஜன்குறை கிருஷ்ணன்:** எதிர்பார்ப்புகளையெல்லாம் கடந்து சிறப்பான ஓர் ஆட்சி நடைபெற்று இருப்பதாகத்தான் நான் நினைக்கிறேன். நாள்தோறும் காலையில் 9 மணிக்கு தொலைக்காட்சி செய்திகளைப் பார்க்கிறேன்; 10 மணிக்குத் தொலைக்காட்சி செய்திகளைப் பார்க்கிறேன். நான் தமிழ்நாட்டில் இல்லை, டில்லியில் இருக்கிறேன். அதனால், காலையில் ஒளிபரப்பாகும் செய்திகளையும், மாலையில் ஒளிபரப்பாகும் செய்திகளையும் பார்ப்பேன்.

தினகரன் போன்ற நாளிதழ்களை இணைய தள வழியாகப் படிக்கிறேன். ஒவ்வொரு நாளும் தொடர்ந்து ஒரு எக்ஸ்கியூட்டிவ் இண்டண்ட் என்பார்கள். ஆட்சி நிர்வாகம் செய்கிறவர்கள் தொடர்ந்து ஏதாவது ஒன்றைச் செய்துகொண்டே இருக்கவேண்டும். முன்னேற்றம், ஒரு மாற்றம், ஒரு புதிய விஷயத்தை செய்யவேண்டும்; மேம்படுத்த வேண்டும் என்கிற எண்ணம் குறையாமல் இருக்கிறது. எஞ்ஜின் வேகம் நிற்காமல் சென்றுகொண்டிருப்பதாகத்தான் நான் உணர்கிறேன்.

தொடர்ந்து ஏதாவது ஒரு முன்னெடுப்புகளைச் செய்துகொண்டே இருக்கிறார்கள். அது எந்தத் துறையாக இருந்தாலும்; பொருளாதாரமாக இருக்கலாம்; பண்பாட்டு விஷயமாக இருக்கலாம்; மக்கள் நலத் திட்டங்களாக இருக்கலாம்; மாநில உரிமை சார்ந்ததாக இருக்கலாம்.

நாள்தோறும் ஒரு முன்னெடுப்பு, ஒரு செய்தி, ஒரு நகர்வு சிறந்த ஆட்சியாகத்தான் என்னால் பார்க்க முடிகிறது. நான் விமர்சனக் கண்ணோட்டத்தில் தான் இந்த ஆட்சியைப் பார்க்கிறேன், நான் ஆதரவு தெரிவித்தாலும்கூட!

### தெளிவான கருத்துக்களை முதல்வர் எடுத்து வைக்கிறார்!

எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. குறிப்பாக ஸ்டாலின் தலைமை என்பது, எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பான முறையில்தான் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டளவிலும் சரி, இந்திய அளவிலும் சரி மிக முக்கியமான ஒரு தலைவராக இருக்கிறார்.

அளவாகவும், அதேநேரத்தில், தேவையான நேரத்தில் தீவிரமாகவும் பேசக்கூடியவராகவும், தெளிவான கருத்துகளை முன்னெடுத்து வைப்பவராகவும் அவர் உருவாகியிருக்கிறார்.

நாம் மட்டும் இதைச் சொல்லவில்லை. மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் சொல்கிறார்கள். ‘‘ஆகா, ஸ்டாலின் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக ஆட்சி செய்கிறார்‘‘ என்று முற்போக்குச் சிந்தனை உள்ள அனைவரும் சொல்கிறார்கள். வலதுசாரி சிந்தனை உள்ளவர்கள், பா.ஜ.க.வினர் இப்படி சொல்ல மாட்டார்கள். அவர்களுக்கு வேறுவிதமான அபிப்பிராயம் இருக்கும்.

ஆனால், முற்போக்குச் சிந்தனை உள்ள நண்பர்கள், கல்வியாளர்கள், பொதுநல நோக்குள்ளவர்கள் யாராக இருந்தாலும் என்ன சொல்கிறார்கள் என்றால், “உங்கள் மாநிலத்தில் எந்த விதமான பிரச்சினையும் இல்லை; முதலமைச்சர் ஸ்டாலின் இருக்கிறார்‘‘ என்று பொறாமைக் கண்ணோட்டத்தோடுதான் பார்க்கிறார்கள். அதை நான் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகத்தான் நான் நினைக்கிறேன்.

### மிக மோசமான காலக் கட்டத்தை நோக்கி உலகம் செல்கிறது!

உலக அரசியலையும் நான் கவனித்துக் கொண்டு வருபவன். வலதுசாரி எழுச்சி உலக நாடுகள் முழுவதும் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றது. உலக அரசியலே மிக மோசமான காலகட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அமெரிக்காவில் டிரம்ப், பிரான்சில் வலதுசாரிகள் ஆட்சி, பிரிட்டனில் வலதுசாரி ஆட்சி. எல்லா நாடுகளிலும் வலதுசாரிகளின் ஆக்கிரமிப்பு இருக்கிறது. என்னுடைய நூல் ஒன்றுக்கு “எதிர்ப்புரட்சிகளின் காலம்“ என்று பெயர் வைக்கின்ற அளவிற்கு, ஓர் எதிர்மறையான சக்திகள் மிக அதிகமாக உலகத்தில் இருக்கிறது.

இப்படிப்பட்ட காலகட்டத்தில், முற்போக்குச் சிந்தனை, சமூகநீதி, சுயாட்சி, மாநில உரிமை போன்றவை – மாநில உரிமை என்பது அதிகாரப்பரவல். அதிகாரப்பரவல்தானே முற்போக்கு. அதிகாரம் எல்லா இடங்களுக்கும் பரவவேண்டும்; ஓரிடத்தில் குவியக்கூடாது. அதுதான் மாநில சுயாட்சி.

முற்போக்கு, சமூகநீதி இவை எல்லாவற்றிலும் தமிழ்நாடு, உலகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நிகழ்வுகளுக்கு மாற்றாக, எதிர்திசையில், கடந்த நான்காண்டுகால ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றது. அது ஓர் ஆறுதலைக் கொடுக்கிறது.

உலக நாடுகளில் நடைபெறுகின்ற நிகழ்வுகளைப் படிக்கும்போது, மனது வேதனைப்படுகிறது. காசா, அமெரிக்கா, உக்ரைன் போன்ற நாடுகளில் நடைபெறும் நிகழ்வுகளைப் படித்துவிட்டு, தமிழ்நாட்டைப் பார்க்கும்போது ஒரு ஆசுவாசம் ஏற்படுகிறது.

### உலக அரசியலில் பசுமையான ஒரு தீவு!

நம் ஊரில், ஆட்சி நன்றாக நடைபெறுகிறது. மகிழ்ச்சியைத் தரக்கூடிய அளவிற்குத் தமிழ்நாடு, உலக அரசியலில் பசுமையான ஒரு தீவாக இருப்பது போன்று, நான் மனப்பூர்வமாக நினைக்கிறேன்.

நான், 1969 ஆம் ஆண்டிலிருந்து அரசியலை செய்தித் தாள்களைப் படித்துத் தெரிந்துகொண்டவன். அன்றைய காலகட்டத்தில் நான் சிறுவன் என்பதால், தெளிவாகப் புரிந்துகொள்ள முடியாது. அந்தக் காலகட்டத்தில், தி.மு.க. ஆட்சி, மாநிலத்திற்கான முக்கியமான முன்னெடுப்புகளைச் செய்தது என்பதை, ஜெயரஞ்சன் எழுதியதிலிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

பொது விநியோகத்தை உறுதி செய்தது; தமிழ்நாட்டில் நெல்கொள்முதலை உறுதி செய்தது போன்ற பல விஷயங்களை முன்னெடுத்தார்கள் என்பதைத் தெரிந்துகொண்டேன். கடந்த நான்காண்டுகளில், நீண்ட கால தாக்கமாக இருக்கின்ற விஷயங்கள் நடைபெற்றதாக நான் நினைக்கிறேன்.

### மிகச்சிறந்த காலைச் சிற்றுண்டித் திட்டம்!

காலைச் சிற்றுண்டி திட்டம் என்பது, மிகச் சிறந்த திட்டமாகும். சிந்தனைக் கட்டுமானத்தை மாற்றும் திட்டம் இது. இந்தத் திட்டத்தை, இனி யாராலும் நிறுத்த முடியாது. மிகுந்த மன துணிச்சல், தெளிவு, திட சிந்தனை வேண்டும் இதுபோன்ற திட்டத்தைத் தொடங்குவதற்கு. அதைத் துணிந்து செய்திருக்கின்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

குறைகள் இல்லாமல் ஓர் உலகம் இருக்கவே முடியாது மானுட வரலாற்றில். நான் ஒரு மானுடவியலாளனாகச் சொல்கிறேன், எந்தக் காலத்திலும் குறைகள் இல்லாமல் இருக்க முடியாது.

காலை சிற்றுண்டித் திட்டம் என்பது, மிகப்பெரிய சிறப்பான திட்டமாகும். அதேபோன்று, மகளிர் விடியல் பயணம்; மகளிர் உரிமைத் தொகை போன்ற திட்டங்களை இனிமேல் யாராலும் பின்வாங்க முடியாது. உரிமைத் தொகையை அதிகப்படுத்திக் கொண்டுதான் போகவேண்டும்.

டில்லியில், ஆம் ஆத்மி ஆட்சியில், ஆயிரம் ரூபாய் கொடுத்தால், பா.ஜ.க. 2,500 ரூபாய் கொடுப்போம் என்கிறார்கள். சத்துணவுத் திட்டத்திலும் அதைப் பார்த்தோம்; ஒரு முட்டை, பிறகு இரண்டு முட்டை என்று அதிகரித்தது. அதிகரிக்கத்தான் முடியுமே தவிர, குறைக்க முடியாது.

### பண்பாட்டுத்துறையில் ஒரு பெரிய பாய்ச்சல்!

இந்த மாற்றங்களை, மக்கள் நலனை நோக்கிய மாற்றங்கள் என்பது மிகமிக முக்கியமானதாகும். அதில் மிக முக்கியமான திருப்பு முனைகளை கடந்த நான்காண்டுகளில் செய்திருப்பது பெரிய விஷயமாகும். அதற்கு ஈடாக, பொருளாதாரம், அதிலேயும் ஒரு வளர்ச்சிப் பாதையில், திட்டவட்டமாக புள்ளி விவரங்களையெல்லாம் சொல்லி, பொருளாதார வளர்ச்சி குறையாமல், இதனைச் செய்வது. அந்நிய முதலீடுகளை ஈர்ப்பது.





எனக்கு மிக நெருக்கமான துறை – நான் கல்வியாளன், எழுத்தாளன் என்பதால், பண்பாட்டுத் துறையில் அவர் செய்திருக்கின்ற முன்னெடுப்புகள் என்பது மிகச் சிறப்பானதாகும். தமிழ்நாடு அரசு ஏற்பாடு சென்னை இலக்கிய விழாவிற்கு என்னை அழைத்தார்கள். அவ்விழாவிற்கு நான் சென்றிருந்தேன்.

1980 ஆம் ஆண்டுகளில், நாங்கள் செலவு செய்து அந்த விழாக்களை நடத்துவோம். கருத்தரங்கம் நடத்துவோம். ஆனால், இன்றைக்கு அய்ந்தாறு இடங்களில் இலக்கியத் திருவிழாக்களை அரசே நடத்துகிறது. இதைப் பார்க்கும்போது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. இது ஒரு பெரிய பாய்ச்சல் என்றுதான் நான் சொல்வேன். அரசு செய்யும் ஒவ்வொரு விஷயத்தைப் பார்க்கும்போதும் எங்களைப் போன்றவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. புத்தகக் கண்காட்சி, நூலகம், கீழடி ஆய்வு போன்றவை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

**1980 ஆம் ஆண்டுகளில், நாங்கள் செலவு செய்து அந்த விழாக்களை நடத்துவோம். கருத்த ரங்கம் நடத்துவோம். ஆனால், இன்றைக்கு அய்ந்தாறு இடங்களில் இலக்கியத் திருவிழாக்களை அரசே நடத்துகிறது. இதைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. இது ஒரு பெரிய பாய்ச்சல் என்றுதான் நான் சொல்வேன். அரசு செய்யும் ஒவ்வொரு விஷயத்தைப் பார்க்கும் போதும் எங்களைப் போன்றவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. புத்தகக் கண்காட்சி, நூலகம், கீழடி ஆய்வு போன்றவை மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.**

**நெறியாளர்:** நீங்கள் இருக்கக்கூடிய டில்லியில், உங்களைச் சுற்றி நடக்கின்ற அரசியல் நிகழ்வுகளை உன்னிப்பாகப் பார்த்துவிட்டு, அங்கே இருந்து தமிழ்நாட்டைப் பார்க்கின்றபோது ஏதோ ஒரு தனித் தீவாக இருக்கிறது என்று சொல்கிறீர்கள். ஆனால், தமிழ்நாட்டிலேயே இருக்கின்றவர்களுக்கு, தமிழ்நாட்டை விட்டு வெளியே போகாதவர்களுக்கு, அ.தி.மு.க. ஆட்சி, தி.மு.க. ஆட்சி என்று மாறி மாறி பார்ப்பவர்களுக்கு, இதுபோன்ற பருந்து பார்வையில் ஒரு விஷயத்தைப் பார்க்க முடியுமா? என்பது ஒரு சந்தேகம்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு பிரச்சினை முன்னெடுக்கப்படும். மின்வெட்டு ஒரு பெரிய பிரச்சினையாக வரும். 2ஜி போன்ற விஷயங்கள் தேர்தல் நேரத்தில், பேசு பொருளாகிவிடும். அல்லது பணப் புழக்கமே இல்லை என்பது ஒரு பெரிய விஷயமாகப் பார்க்கப்படும். வெவ்வேறு தருணங்களில், வெவ்வேறு பிரச்சினைகள் மேலெழுந்து, ஓர் ஆட்சியினுடைய நிர்வாகத்தைக் கவனிக்க முடியாத அளவிற்கோ அல்லது அதனுடைய திசையை மாற்றும் அளவிற்குச் சென்றுவிடும்.

இப்போது 30 ஆண்டுகளில், 1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு, கூட்டணி யுகம் ஒரு 25 ஆண்டுகளாக இருந்தது. இப்போது 10 ஆண்டுகளாக முழுக்க முழுக்க டில்லியில் ஒரு கட்சி ஆட்சி என்கிற நேரத்தில், மெட்ரோ ரயில் திட்டத்திற்கும் நிதி கேட்டுப் போராட வேண்டும்; கல்வி நிதிக்காகவும் போராடவேண்டும்; மருத்துவக் கல்லூரி தொடங்கவேண்டும் என்றாலும், போராடவேண்டும்.

தூத்துக்குடி, திருநெல்வேலி மழை, வெள்ளத்தால் மூழ்குகிறது என்றாலும், அதற்கும் ஒரு மாநில அரசு போராட வேண்டும் நிவாரண நிதி கேட்டு. இப்படி இருக்கின்ற சூழ்நிலையில், நிர்வாகத்தை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? எதற்கு இந்த அரசு முன்னுரிமை தந்திருக்கிறது என்கிறீர்கள்?

### ஒன்றியத்தில் அதிகாரத்தை குவிக்க நினைக்கும் பா.ஜ.க!

**ராஜன்குறை:** எதிர்சக்தியோடு மோத வேண்டிய நிலைதான் இப்போது. இந்திய அரசமைப்புச் சட்டம் எழுதிய காலகட்டத்திலிருந்து, மாநிலங்களே இருக்கக்கூடாது என்கிற மனப்போக்கில் இருப்பவர்கள்தான் பா.ஜ.க.வினர்.

மொத்த அதிகாரத்தையும் ஒன்றியத்தில் குவிக்கவேண்டும் என்று நினைக்கின்ற கட்சிதான், 2014 ஆம் ஆண்டிலிருந்து முழுப் பெரும்பான்மையோடு ஆட்சி செய்கிறது. நரேந்திர மோடி தலைமையில், மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள்.

அவர்களுடைய அஜெண்டாவே, மாநில உரிமைகளைக் குறைத்து, எல்லா அதிகாரங்களையும் ஒன்றியத்திற்குக் கொண்டு போவதுதான். அதை அவர்கள் டபுள் எஞ்சின் சர்க்கார் என்று வெளிப்படையாகவே சொல்கிறார்கள்.

எங்களுக்கு ஓட்டுப் போட்டால்தான், நாங்கள் மாநிலத்திற்கு நல்லது செய்வோம் என்று சொல்வது தவறு என்கிற உணர்வு முன்பு இருந்தது. ஆனால், இப்போது அவர்கள் வெளிப்படையாகவே சொல்கிறார்கள். டபுள் எஞ்சின் சர்க்கார்; எங்களுக்கு மாநிலத்தில் ஓட்டுப் போட்டால்தான், நாங்கள் மாநிலத்திற்கு நல்லது செய்வோம் என்று தேர்தலில் வெளிப்படையாகவே சொல்கிறார்கள்.

அப்படியென்றால், எந்த அளவிற்கு அவர்கள் ஒரு கட்சி ஆட்சியாக நாடு முழுவதும் இருக்கவேண்டும்; ஒன்றியத்தில் அதிகாரத்தைக் குவிக்க வேண்டும் என்பதைப்பற்றி அவர்கள் எப்படி வெளிப்படையாகச் சொல்கிறார்கள் பாருங்கள்.

பா.ஜ.க.வோடு எதிர்நீச்சல்; வலதுசாரிகள் போக்குகளோடு எதிர்நீச்சல்; இன்றைக்கு ஜாதியத்தோட தன்மை என்னவென்றால், நீங்கள் முற்போக்காகப் போகப்போக ஒரு ரியாக்ஷன் வந்து கொண்டே இருக்கும். ஆணாதிக்கம், ஜாதியம் என்பதையெல்லாம் எப்படி என்றால், அடிக்க அடிக்கக் கிளம்பும், ‘பேய்‘ போன்று.

### சவால்கள் நிறைந்த நான்காண்டு!

வளர்ச்சியை நாம் செய்ய செய்ய, ஜாதீய நோக்குகள் அதிகரிக்கும். அதனால், அந்த ரியாக்ஷன் எல்லாவற்றையும் எதிர்கொண்டுதான் நாம் கொண்டு போகவேண்டும். கடந்த நான்காண்டு கால ஆட்சியை எதிர்நீச்சல்களுக்கிடையே நடத்திக் கொண்டிருக்கிறார். மேலே பாம்பு, கீழே நரி; அகழி, தடுப்புச் சுவர் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சட்டப்பேரவையில் சொன்னார். சவால்கள் நிறைந்த சூழ்நிலையில், தெளிவான ஒரு நோக்கு, திட்டமிடல், திடச்சித்தம் எல்லாம் சேர்ந்துதான், கடந்த நான்காண்டு கால ஆட்சியில், இந்த அளவிற்கு செய்யய முடிந்ததாக நான் பார்க்கிறேன்.

**“இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்”** என்ற திருக்குறளுக்கேற்ப, சரியான இடத்திற்கு, சரியான அமைச்சர்களையும், சரியான அதிகாரிகளையும் சரியான முறையில் நியமித்துக் கொண்டுபோவது என்பது சாதாரணமானதல்ல.

செய்தித் தாள்களைத் தொடர்ந்து பார்க்கும்போது, ஒவ்வொரு விஷயமும் பார்த்துப் பார்த்துச் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. அதற்குப் பெயர் குறைகள் இல்லை என்று சொல்ல முடியாது. நாம், மதிப்பெண்கள் வழங்க வேண்டும். நிறைகளுக்கு எவ்வளவு மதிப்பெண்; குறைகளுக்கு எவ்வளவு மதிப்பெண் என்று பார்க்க வேண்டும்.

குறைகள் என்பது பெரும்பாலும் ரியாக்ஷன்தான். வளர்ச்சி வந்தாலே, எனக்கு அதிகமாக வேண்டும் என்ற நிலைதான் இருக்கும். ஜாதீய நோக்குகளில், எதிர்மறைப் போக்குகள் வருவதற்குக் காரணம், கீழே உள்ளவர்கள் மேலே வரும்போது, மேலே இருப்பவர்கள், அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தானே வெட்டுகிறார்கள். நாம், கீழே உள்ளவர்கள் நன்றாகப் படிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தி விட்டோம்.

தாழ்த்தப்பட்டவர்கள் நன்றாகப் படிக்கும்போது, மேலே உள்ளவர்கள் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல், இப்படிச் செய்கிறார்கள். ஆகையால், வளர்ச்சியால் வருகின்ற ஒரு ரியாக்ஷன் இது. இதை சமாளித்துத்தான் ஆக வேண்டும்.

மாநில நலனை முதன்மைப்படுத்த வேண்டும். அரசியலில் போட்டிப் போடுகின்ற எந்தக் கட்சியாக இருந்தாலும் என்ன சொல்லவேண்டும் “இதைவிட நாங்கள் நன்றாகச் செய்வோம்“ என்று சொல்லலாம். ஆனால், ஆட்சியை எதிர்க்கவேண்டும் என்பதற்காக, நல்ல விஷயங்களைப் பாராட்டாமல், குறைகளை மிகைப்படுத்தி சொல்வது என்பது, சொல்பவர்களுக்கே வெற்றியை தராது.

அதை எப்படிச் சொல்லவேண்டும் என்றால், இதைவிட இன்னும் சிறப்பாகச் செய்யலாம்; இதை இப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லவேண்டும். ஆனால், அரசு செய்வதைப் பாராட்டாமல், எதுவுமே நடக்கவில்லை என்று எதிர்மறையாகப் பேசுவது; இந்த ஆட்சி மிக மோசமான ஆட்சி என்று ஒரே அடியாக அடித்துப் பேசினால் முடிந்து போய் விடும் என்று சொல்வது சரியான அரசியலாகவும் இருக்காது; வெற்றிகரமான அரசியலாகவும் இருக்காது.

எதிர்க்கட்சிகள் ஹோம் செய்ய வேண்டும்; அப்படி செய்தால்தான், மாற்றுச் சிந்தனையோ, மற்ற வழிகளையோ சொல்லவேண்டும். நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வை ஒழித்துவிடுவோம் என்று சொல்கிறீர்களே அதனைச் செய்தீர்களா? என்று கேட்கிறார்கள். இது ஒரு வாதமே அல்ல!

அதற்காக என்னென்ன முயற்சிகளை செய்யவேண்டுமோ அதையெல்லாம் மிகச் சிறப்பாக செய்திருக்கிறது தி.மு.க. அரசு. ஆணையம் அமைத்து, அந்த ஆணையத்தின் ஆய்வறிக்கையை அளித்தாகி விட்டது. மக்கள் கையெழுத்து இயக்கம் நடத்தி அதையும் அனுப்பியாகிவிட்டது. சட்டப்பேரவையில், தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியாகி விட்டது.

இதற்குமேலும், ஒன்றிய பா.ஜ.க. அரசு நீட் தேர்வை நடத்துகிறது என்றால், பா.ஜ.க.வை நோக்கி கேள்வி கேட்கவேண்டுமா? அல்லது தி.மு.க.வை நோக்கி கேள்வி கேட்கவேண்டுமா?

**ஏனென்றால், பிற்போக்குச் சக்திகள் மக்களைத் திசை திருப்புவது; முக்கியமான விஷயம் என்னவென்றால், எந்தக் கட்சி ஆட்சி செய்கிறது என்பது முக்கியமல்ல; மாநில உரிமைகள், மாநில நலன், சமூகநீதி இவையெல்லாம் கட்சி சம்பந்தப்பட்டது அல்ல. ஆகவே, அவற்றைக் காப்பாற்றுவதற்கு என்ன செய்யவேண்டும் என்கிற ஒரு விழிப்புணர்வை நோக்கி எல்லோரையும் கொண்டு போகவேண்டும். அதுதான் இன்றைக்கு இருக்கின்ற முக்கியமான சவாலாகும்.**

அதைக்கூட அரசியல் சுய லாபத்திற்காக, குறுகிய கண்ணோட்டத்தோடு, தி.மு.க.வை நோக்கி கேள்வி கேட்பது வேடிக்கையாக இருக்கிறது. ஓர் ஆய்வாளன் என்கிற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, இன்றைய அரசியல் இவ்வளவு மோசமாகிவிட்டதே என்று வேதனைப்பட நேர்கிறது.

உண்மையிலேயே நீட் தேர்வை ஒழிக்கவேண்டும் என்றால், தி.மு.க. அரசோடு இணைந்து போராடி ஒழிக்க வேண்டும். நீட்டை எதிர்க்கவில்லை, பா.ஜ.க.வைப் போன்று, நாங்களும் ஆதரிக்கிறோம் என்று சொல்லுங்கள்.

அப்படியும் சொல்லாமல், இப்படியும் சொல்லாமல், நீங்கள் ஏன் நீட் தேர்வை ஒழிக்கவில்லை என்று கேட்பது நியாயமற்றது. ஒரு மாநில அரசு நீட் தேர்வு ஒழிப்பிற்காக, தன் சக்திக்கு உள்பட்டு அனைத்தையும் செய்திருக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு அதனை கண்டுகொள்ளவில்லை என்பதுதானே உண்மை.

**நெறியாளர்:** இன்னும் ஓராண்டு காலம் தி.மு.க. ஆட்சிக்கு இருக்கிறது. ஓராண்டு காலம் என்பது அரசியல் ரீதியாக, நிறைய சவால்களை, அரசியல் முனையில், நிர்வாகம் குறைந்து, அரசியல், கூட்டணிப் பேச்சுவார்த்தைகள், தேர்தலை நோக்கிய நகர்வுகள் என்று போகக்கூடிய ஒரு காலம்.

புதிய திட்டங்களை செயல்படுத்தி, ஆறு மாதத்திற்குள் புதிதாக சாதிக்கக்கூடிய அவகாசம் இல்லாத நிலை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், நான்காண்டு நிறைவில், இப்போது செய்யவேண்டிய அம்சம் என்ன? இப்போது முன்னுரிமை தரவேண்டிய விஷயம் எது? இப்போது இந்த அரசுக்கு இருக்கவேண்டிய சவால்கள் என்ன?

### குரியன் அறிக்கை இந்திய அரசியலில் வீச்சை ஏற்படுத்தும்!

ராஜன்குறை: 1967 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு வரைக்கும் தமிழ்நாடு சிறப்பான திசையில் பயணிக்கத் தொடங்கியது. 1975 ஆம் ஆண்டிற்குப் பிறகு, பயணம் அப்படியும், இப்படியும் அலைமோதியது. கடந்த நான்காண்டுகளில், மீண்டும் அந்தப் பழைய திசைக்கே வந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன்.

ஒன்றிய – மாநில உரிமைகளுக்காக, குரியன் தலைமையில் ஓர் ஆணையம் அமைக்கப்பட்டு இருக்கிறது இப்போது. அந்த ஆணையம் கொடுக்கக்கூடிய ஆய்வறிக்கை என்பது மிக முக்கியமான ஒரு வீச்சை தமிழ்நாட்டு அரசியலிலும், இந்திய அரசியலிலும் ஏற்படுத்தும் என்று நினைக்கின்றேன்.

மக்களைத் தொடர்ந்து மாநில அரசின் உரிமைகளின் முக்கியத்துவம் என்ன? எப்படி மாநில உரிமைகள் பறிபோகின்றன? பா.ஜ.க.வினுடைய செயல் திட்டங்கள் எப்படி இருக்கின்றன? என்பதை மக்களிடையே எடுத்துச் சொல்லி, விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பது ஒரு சவாலான விஷயம்தான்.

### இன்றைய முக்கிய சவால்!

ஏனென்றால், பிற்போக்குச் சக்திகள் மக்களைத் திசை திருப்புவது; முக்கியமான விஷயம் என்னவென்றால், எந்தக் கட்சி ஆட்சி செய்கிறது என்பது முக்கியமல்ல; மாநில உரிமைகள், மாநில நலன், சமூகநீதி இவையெல்லாம் கட்சி சம்பந்தப்பட்டது அல்ல. ஆகவே, அவற்றைக் காப்பாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிற ஒரு விழிப்புணர்வை நோக்கி எல்லோரையும் கொண்டு போகவேண்டும். அதுதான் இன்றைக்கு இருக்கின்ற முக்கியமான சவாலாகும்.

சின்னச் சின்னப் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்திப் பேசுவது; திசை திருப்புவது என்பதெல்லாம், நீண்ட கால நோக்கில், அரசியல் செய்யவேண்டியதிலிருந்து நம்மைத் தடுத்துவிடக் கூடாது.

நாரேட்டிவ் செட்டிங் என்று இன்று ஊடகங்கள் எல்லாம் சொல்கின்றன. இன்றைக்குப் பா.ஜ.க.வை நாம் புரிந்துகொண்டு, அதனுடைய செயல்திட்டங்கள் என்ன என்பதைப் புரிந்துகொண்டு, மாநில சுயாட்சி, சமூகநீதிக்கான ஒரு விழிப்புணர்வை கொண்டு போவதைத்தான் ஒரு சவாலாக நான் பார்க்கிறேன்.

அதற்காக ஒரு ஆணையம் அமைக்கப்பட்டு இருக்கிறது என்பது மிக முக்கியமான விஷயமாகும். ஓராண்டில், அந்த ஆணையம் அறிக்கைக் கொடுத்தால், அதை முன்னிலைப்படுத்தி, மாநில சுயாட்சிக்கான ஓர் அரசியலை முன்னெடுப்பதற்கு மிகவும் வாய்ப்பாக இருக்கும். அதைத்தான் நானும் எதிர்நோக்கி இருக்கிறேன்.

இந்தியாவில், மாநிலங்களுக்கு அதிகாரப் பகிர்வை செய்யாமல், இந்தியக் குடியரசு என்பது அடுத்தகட்டம் நகர முடியாது. சமூகநீதியை செய்யாமல், ஜாதிவாரி கணக்கெடுப்பை எடுத்தால் பயனில்லை. இதை நோக்கித்தான் வரலாறு நகர வேண்டிய திசை. அந்தத் திசையை நோக்கித்தான், சிந்தாமல், சிதறாமல் அதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்துதான் அடுத்த ஓராண்டில் முக்கியமான செயலாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

ஒன்றிய அரசிடம் அதிகாரம் குவிந்திருக்கும்போது, எந்த ஒரு மாநிலத்தையும் தனியாகப் பிரித்து ஒரு தேர்தலை நடத்த முடியுமா? என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சினை. மாநில அரசு எதைக் கேட்டாலும், ஒன்றிய அரசை நோக்கித்தானே போகிறது. நிதி ஆதாரங்கள், மற்ற மற்றவை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது, அது சாத்தியப்படாது.

ஒன்றியத்தில் பாசிச அமைப்பு ஆட்சியில் இருக்கிறது என்பதுதான், இன்றைக்கு ஒரு பெரிய பிரச்சினை. மாநிலத்திற்கு மட்டுமான தேர்தல் என்று நாம் கொள்ள முடியும்.

இவ்வாறு பேராசிரியர் ராஜன்குறை கிருஷ்ணன் அவர்கள் கூறினார்.